**கோ.ம.சா.1– சீதாலட்சுமி** **L.A.O.P.No.436/2022** 23.03.2026.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

ஆர்ஜிதம் செய்யப்பட்ட சர்வே எண்.163/1ல் கண்ட சொத்தில் 1/2 பங்கு ரெங்கநாயகியம்மாளுக்கும், 1/2 பங்கு வெங்கட் ராமானுஜத்துக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வெங்கட் ராமானுஜம் பெயரில் வழங்கப்பட்ட நிலவுடமை மேம்பாட்டுத் திட்ட பட்டாவில் அவரது தகப்பனார் பெயர் அக்காள் நாயக்கர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நில ஆர்ஜித அதிகாரி விசாரணையின்போது வெங்கட் ராமானுஜம் தகப்பனார் பெயர் எங்காள் நாயக்கரின் வாரிசுகள் நாங்கள் என்பதன் அடிப்படையில் உரிமை கோருகிறோம் என்றால் சரிதான். ஆர்ஜித அதிகாரி எங்காள் நாயக்கர் என்பவரும் அக்காள் நாயக்கர் என்பவரும் ஒரே நபரான வெங்கட் ராமானுஜத்தின் தகப்பனார் என்பதை பொறுத்து ஒருநபர் சான்றிதழ் ஆஜர் படுத்த கூறினார்கள் என்றால் சரிதான். நான் ஒருநபர் சான்றிதழை ஆஜர் படுத்தாததால் ஆர்ஜித நிலத்திற்குண்டான ஆர்ஜித தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தார்கள் என்றால் சரிதான். தற்போது வரை நான் ஒருநபர் சான்றிதழ் வாங்கி ஆஜர் படுத்தவில்லை என்றால் சரிதான். நாங்கள் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எங்காள் நாயக்கரும், அக்காள் நாயக்கரும் ஒரே நபர்தான் என்றும், அவர்தான் வெங்கட் ராமானுஜத்தின் தகப்பனார் என்பதை நிரூபிப்பதற்கு போதுமானவைகள் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.